முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21 திகதி முதல்

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28 திகதி வரை

(08.10.2023 ஞாயிறு முதல் 15.10.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞான வள்ளலே
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அவனியில் உன்அவதாரம் மெச்சி
   அகத்திய மகரிஷி யானும் இனிதே
2. இனிதே இந்தியா தமிழகத்தில்
   இயம்பிட சோபகிருது தரிவை திங்கள்
   கணிவுபட மூவேழு திகதிமேல் எழுநான்கு திகதிவரை
   கணக்காய் நடக்கும் வார நிகழ்வாக
3. ஆகவே எதிர்கால பலன்குறித்த
   ஆசிதனை அரங்க ஞானி கேட்க
   வகைபட இதுகாலம் உரைப்பேன்
   வல்லமை கொண்ட தேசமாக
4. ஆகவே இந்தியா தன்பலத்தை
   ஆதரவு நாடுகளோடு நிரூபிக்கும்
   வகைபட வளர்ச்சி பணிகளும்
   வளர்ந்த நாடுகள் தொடர்புடன்
5. தொடர்புடன் ஏற்றம் காணும்
   தொடர்ந்து நேசநாடுகள் துணைபட
   இடர்பகை அனைத்தும் கடந்து
   இந்தியா தனித்துவம் அடையும்

6. அடையவே தமிழகம் தானும்
அவலமான சீர்கேடுகள்தனை
தடையற அகற்றி மீட்கின்ற
தக்க ஞான ஆளுமையாக மாற்றம்

7. மாற்றம் கண்டு செயல்பட
மக்களை நோக்கித் தயவாக
ஆற்றல்பட சேவை தன்னை
அனைவரும் பயனுறும் வண்ணம்

8. வண்ணம் நடத்திட வேண்டும்
வகையிலா ஊழல் தன்மை
எண்ணமதில் வராத வகை
எதேச்சயான செயல் முறைகளாக

9. ஆகவே இந்தியா தமிழகம்
ஆளுமை தன்னை நடத்திவர
வகைபட மக்கள் ஏற்கும்
விரும்பும் தலைமையாக மாறி

10. மாறியே மக்களை போற்றும்
மதித்து வழிநடத்துகின்றபடி
ஆறுதல் தரும் ஆக்கம் தரும்
ஆளுமையாக இந்தியா தமிழகம் மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 28ம் நாள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் சக்தி வடிவமாக கலியுக மீட்பின் ஞானியாக அவதாரம் செய்திட்ட ஞான வள்ளலே ஞானதேசிகனே ஆறுமுக அரங்க மகா தேசிகரே உமது அவதாரத்தினை போற்றியே அகத்திய மகரிஷி யானும் இனிதே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள்

**08.10.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் **28**ம் நாள் **15.10.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வினை வார ஆசி நூலாக எதிர்கால பலனாக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்திய தேசம் இனிவரும் காலங்களில் தனது பலத்தினை ஆதரவு நாடுகளுக்கு நிரூபித்து காட்டும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் துணையுடன் எல்லா துறைகளிலும் முன்னேற்றம் அடையும். தமது நட்பு நாடுகளின் துணையுடன் நாட்டிற்கு உண்டாகும் இடர்களையும் பகைவர்களையும் கடந்து இந்திய தேசம் தனித்துவத்தினை அடையுமப்பா.

அந்த சமயத்திலேனும் தமிழகம் தமது சீர்கேடுகளை, தடைகளை நீக்கி நாட்டை மீட்கும் விதமாக ஞானமுள ஆட்சியாக மாற்றம் அடைந்து மக்கள் நலனிற்காக, தயவுடன் சேவை புரியும் ஆட்சியாக மாற வேண்டும் நாட்டு மக்கள் அனைவரும் பயன் பெறும் விதமாக ஆட்சி முறை செய்திட நலமப்பா.

துன்பம் விளைவிக்கும் வகையிலே உள்ள ஊழல் செய்யும் எண்ணமே மனதில் வராதவாறு உறுதியான செயல்பாடுகளை ஆட்சியர்கள் நடந்திட்டால் அந்த ஆட்சி மக்கள் மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் தலைமையை உடைய ஆட்சியாக மாறி மக்கள் போற்றும் விதமாக மக்களை மதித்து வழி நடத்தும் சிறப்பான ஆட்சியாகவும் மக்களுக்கு ஆறுதல் தரும் ஆட்சியாகவும் ஆக்கமும் ஊக்கமும் பெற்று நல்லாட்சியாக மாறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—